

இராணிப்பேட்டைமாவட்டம் வாலாஜா அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் 'வனமும் வாழ்வும்' திட்ட நிறைவு விழாவில் 500 மாணவ, மாணவியருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர், மாவட்டச் செயலாளர் ஆர். காந்தி வழங்கினார். இந்நி கழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், மாவட்ட வன அலுவலர் அசோக் குமார் , நகராட்சி தலைவர் ஹரிணி தில்லை. முதன்மை கல்வி அலுவலர் மோகனா. மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கி ணைப்பாளர் முனைவர் பூ.தேவி மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.சுந்தரம், ஒன்றிய செயலாளர் எம்.சண்முகம், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பன்னிர் செல்வம் மற்றும் வனத்துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அறிஞர் அண்ணா நினைவு நாள்!



அறிஞர் அண்ணாவே
ஆகச்சிறந்த ஆளுமையே

எழுச்சி மிக்க எழுத்துகள்
உணர்ச்சி மிக்க உரைகள்

தரம் குறையாத தங்கம் நிகர்
உயர் எண்ணங்களைத்
தமிழ் நாட்டின் வளர்ச்சிக்குத் தந்தீர்கள்!

வாழ்கிறீர்கள் இளைஞர்களின்
எண்ண ஓட்டத்தில்
செயலின் துடிப்பில்

கண்டேன்! மகிழ்ந்தேன்
நடந்து முடிந்த நூல் கண்காட்சி
திடலில்
இந்து நாளிதழ் வெளியிட்ட
தங்களின் நூல் 17 வது
பதிப்பினைத் தமிழில் கண்டு
பல மொழிகளிலும் இந்நூல்
வெற்றி உலா வருகிறது!

பல்லவ நாடு தந்த பகுத்தறிவு
வைரமே!
தந்தை பெரியாரின் அறிவுச் சுடரே

முட்டவரும் சனாதன வெறியர்கள்
ஆட்டத்தின் கொட்டத்தை

உங்கள் தீ சுட்டெரிக்கும் !

தீ பரவட்டும்! தீ பரவட்டும் !!
பகுத்தறிவு ஓங்கட்டும்
பொதுவுடைமை மலரட்டும் !!

பேராசிரியர்
**மு.நாகநாதன்**



## விமானப் பயணிகளின் பாதுகாப்பு குறித்து

# ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்னென்ன?

## மக்களவையில்— டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி,பிப். 4 -

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 29 டிசம்பர் 2025 அன்று மக்களவையில், விமானப் பயணிகளின் பாதுகாப்பு குறித்து ஒன்றிய அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும், ஏர் மார்ஷல் ஏ. கே. சேத் குழுவின் பாதுகாப்பு பரிந்துரைகள் ஏன் அமலாக்கப்படவில்லை? என்றும் கண்காணிப்பு ஆணையத்தின் அறிக்கைகள் ஏன் பொது மக்களுக்கு தெரிவிக்கப்படுவது இல்லை? என்றும், எல்லா அறிக்கைகளுமே விமான ஓட்டிகளை குறை சொல்வது ஏன்? என்றும் கடந்த இருபது ஆண்டுகளின், விமான விபத்துகளிலிருந்து ஒன்றிய அரசு பாடம் கற்றுக்கொள்ளாதது ஏன்? என்றும் ஒன்றிய அரசின் விமானப் போக்குவரத்துத்துறை இணையமைச்சர் முரளிதர் மகோல் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வரு மாறு :

ஒன்றிய அரசின் விமான விபத்துகள் கண்காணிப்பு ஆணையம் கடந்த 2012ஆம் ஆண்டில், முழு அதிகாரம் பெற்ற அமைப்பாக விமானப் போக்குவரத்து அமைச்சகத்தால் அமைக்கப்பட்டது என்றும், ஏர் மார்ஷல் ஏ.கே. சேத் குழுவின் பரிந்துரைப் படியே இந்த ஆணையம் முழு அதிகாரம் கொண்ட அமைப்பாக உருவாக்கப் பட்டது என்றும், விமான விபத்துக்கள் கண்காணிப்பு விதிகளின்படியே, நியாயமாகவும், நேர்மையாகவும், முறையான கண்காணிப்புகளை இந்த ஆணையம் மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்றும்,

இந்த ஆணையத்தின் அறிக்கைகள் அனைத்தும் ஆணையத்தின் இணையத் தளத்தில் முறையாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன என்றும், விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநரகத்தின் இணைய தளத்தில் கடந்த 2006 ஆண்டு முதலாக தற்போது வரை உள்ள அறிக்கைகள் அனைத்தும் பொதுமக்களுக்கு முறையாக தெரிவிக்கப்பட்டுள்ளன என்றும், ஒன்றிய அரசின் மாண்புமிகு விமானப் போக்குவரத்துத்துறை இணையமைச்சர் திரு. முரளிதர் மகோல் அவர்கள், மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப் பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்டம் வி.சி.மோட்டூர் வாலாஜாபேட்டை நகரம் வட்டார வளர்ச்சி அலுவலகம் ஆகிய இடங்களில் உள்ள பேரறிஞர்அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர், மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். அமைதி பேரணி நடத்தினார். இதில் ஆர்.வினோத் காந்தி, குமுதா, குமார், சந்தோஷ்காந்தி, சேஷா வெங்கட், எம்.சண்முகம், டி.சி.பத்மநாபன், பி.பூங்காவனம், சி.பெரியசாமி, சுஜாதா, வினோத், ஹரிணி மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் தொலைநோக்கு பார்வையால் – தமிழ்நாட்டின்

# கடற்கரையோர மாவட்டங்களில் சுற்றுலாத்துறை பெரிதும் வளர்ச்சியடைவது உறுதி!

## "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, பிப். 4 –

தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு, நிதி ஒதுக்கீடு செய்வதில் தொடர்ந்து பாரபட்சம் காட்டுகிறது. முதல்வர் மு.க.ஸ்டாலினின் தொலைநோக்கு பார்வையால் தமிழ்நாட்டின் கடற்கரையோர மாவட்டங்களில் சுற்றுலாத்துறை பெரிதும் வளர்ச்சியடைவது உறுதி என "தினகரன் நாளேடு தலையங்கத்தில் கருத்து தெரிவித்துள்ளது.

அது வருமாறு:

தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு, நிதி ஒதுக்கீடு செய்வதில் தொடர்ந்து பாரபட்சம் காட்டுகிறது. ஜல்ஜீவன் திட்டம், மெட்ரோ ரயில், சமக்ர சிக்ஷா (கல்வி நிதி) ஆகியவற்றில் போதிய நிதி வழங்காதது, வெள்ள நிவாரண நிதி தாமதம் என பல்வேறு குடைச்சல் கொடுத்து வருகிறது. இதையெல்லாம் கண்டு கொள்ளாமல் முதல்வர் மு.க.ஸ்டாலின், தீவிர முயற்சியால் சர்வதேச அளவில் உள்ள பெரிய தொழில் நிறுவனங்கள், தமிழ்நாட்டில் ஆர்வத்துடன் முதலீடு செய்து வருகின்றன. இதன் மூலம் ஏராளமான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது.

மேலும் பெரிய நகரங்களில் மட்டும் இந்த தொழிற்சாலைகளை கொண்டு வராமல் மாவட்டந்தோறும் கொண்டு வரப்படுகிறது.



தினகரன்

பிப்ரவரி 3, 2026 செவ்வாய்க்கிழமை

தொலைநோக்கு பார்வை

தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்வதில் தொடர்ந்து பாரபட்சம் காட்டுகிறது. ஜல்ஜீவன் திட்டம், மெட்ரோ ரயில், சமக்ர சிக்ஷா (கல்வி நிதி) ஆகியவற்றில் போதிய நிதி வழங்காதது, வெள்ள நிவாரண நிதி தாமதம் என பல்வேறு குடைச்சல் கொடுத்து வருகிறது. இதையெல்லாம் கண்டு கொள்ளாமல் முதல்வர் மு.க.ஸ்டாலின், தீவிர முயற்சியால் சர்வதேச அளவில் உள்ள பெரிய தொழில் நிறுவனங்கள், தமிழ்நாட்டில் ஆர்வத்துடன் முதலீடு செய்து வருகின்றன. இதன் மூலம் ஏராளமான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது. மேலும் பெரிய நகரங்களில் மட்டும் இந்த தொழிற்சாலைகளை கொண்டு வராமல் மாவட்டந்தோறும் கொண்டு வரப்படுகிறது. அதற்கான உள்கட்டமைப்பு வசதிகளை அரசு ஏற்படுத்தி கொடுக்கிறது.

2021ம் ஆண்டு முதல், தமிழ்நாடு அரசு பல்வேறு நிறுவனங்களுடன் செய்து கொண்ட

அதற்கான உள்கட்டமைப்பு வசதிகளை அரசு ஏற்படுத்தி கொடுக்கிறது.

2021ம் ஆண்டு முதல், தமிழ்நாடு அரசு பல்வேறு நிறுவனங்களுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் சுமார் ரூ.10.32 லட்சம் கோடி முதல் ரூ.12.16 லட்சம் கோடி வரை முதலீடுகளை ஈர்த்துள்ளது. இந்த ஒப்பந்தங்களில் 77% முதல் 80% வரை செயல்பாட்டில் உள்ளதாக தொழில்துறை அமைச்சர் டிஆர்பி. ராஜா தெரிவித்துள்ளார். தொழில் துறை மற்றும் மின்னணு உற்பத்தி போன்ற துறைகளில் இந்த முதலீடுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. 2021க்குப் பிறகு 1,250க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

தமிழ்நாடு, இந்தியாவிலேயே 2வது பெரிய பொருளாதாரமாகவும், பல்வேறு துறைகளில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாகவும் விளங்கி வருகிறது. தமிழ்நாடு 2024–25ம் ஆண்டில் 9.69 சதவீத வளர்ச்சி வீதத்துடன் இந்திய அளவில் முதலிடம் பெற்று உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த அதிகபட்ச வளர்ச்சி இதுவாகும். தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெருகுவதற்கும், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாட்டை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று தொடங்கி வைத்தார். இதில் ரூ.22,794.78 கோடி உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 65,937 பேருக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு என்ற வகையில் 127 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன. இவை பாரம்பரிய சுற்றுலா, சாகச சுற்றுலா, எம்ஐசிஇ சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா போன்ற பல்வேறு சுற்றுலா பிரிவுகளில் மேற்கொள்ளப்பட உள்ளன. சுற்றுலா தொழில், முதலீடுகள், தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க சுற்றுலாத் தலங்கள், தமிழ்நாட்டின் கலாச்சாரம், தொழில் துறைகள் முக்கிய பங்கு, சர்வதேச அளவில் சுற்றுலாவின் வளர்ச்சி, சுற்றுலாவுக்காக தமிழ்நாடு அரசு முன்னெடுக்கும் பணிகள் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை தெரிந்து கொள்ளும் வகையில், பிரமாண்ட கண்காட்சி அரங்கத்தை அமைத்துள்ளது. இதில் மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு பயன்பெறலாம். இதன் மூலம் எதிர்கால சந்ததிகள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறை மூலமாக புதிய திட்டங்கள் கொண்டு வருவதால் அந்தந்த துறைகளும் வளர்ச்சி அடையும்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைநோக்கு பார்வையால் தமிழ்நாட்டில் உள்ள கடற்கரையோர மாவட்டங்களில் சுற்றுலாத்துறை பெரிதும் வளர்ச்சி பெறும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டில்

# எவ்வளவு மக்கள் கல்வி நிறுவன மையங்கள் செயல்படுகின்றன!

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, பிப். 4–

ஒன்றிய அரசின் மக்கள் கல்வி நிறுவன திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் எவ்வளவு மையங்கள் செயல்படுகின்றன என்று மக்களவையில் கழக உறுப்பினர் சி. என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

மக்களவையில் கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் இணை அமைச்சர் கஜேந்திர சிங் செகபவத்திடம் கேட்ட கேள்வி வருமாறு:

வயது வந்தோர் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டிற்கான ஒரு பயனுள்ள கருவியாக மக்கள் கல்வி நிறுவனம் (ஜன் சிக்ஷன் சன்ஸ்தான் (JSS) திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்துகிறதா?

அப்படியானால், தேசிய அளவில் திட்டத்தின் தற்போதைய நோக்கம், உள்ளடக்கம் மற்றும் விளைவுகள் என்ன?

தமிழ்நாட்டில் தற்போது செயல்படும் JSS மையங்களின் எண்ணிக்கை, அவற்றின் மாவட்ட வாரியான விநியோகம், சேர்க்கை நிலைகள் மற்றும் திறன் பயன்பாடு மற்றும் ஏதேனும் மாவட்டங்கள் வெளியிடப்படவில்லையா என்ற விவரங்கள்;

வேலைவாய்ப்பு இணைப்புகள், இணைப்புகளை வலுப்படுத்துதல், பெண்கள் தொழில்முனைவோரை ஊக்குவித்தல், பாடத் திட்டங்களை நவீனமயமாக்குதல் மற்றும் மாநிலத்தில் உள்ளூர் தொழில்துறை தேவைகள் மற்றும் சுயதொழில் வாய்ப்புகளுடன் பயிற்சியை சீரமைத்தல் ஆகியவற்றிற்கு அரசு எடுத்த நடவடிக்கைகள்; மற்றும்

தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் அரை நகர்ப்புறங்களில் JSS மையங்களின் வேலைவாய்ப்பு விளைவுகள், நிலைத்தன்மை மற்றும் பொருத்தத்தை மதிப்பிடுவதற்கு அரசாங்கத்தால் ஏதேனும் சுயாதீன தாக்க மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதா, அப்படியானால், அதன் கண்டுபிடிப்புகள் மற்றும் முன்மொழியப்பட்ட திருத்த நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி கேட்டிருந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# சோ.கி. மூர்த்தி

### பிப்ரவரி 4 (2002)



**கழகம் தொடங்கிய காலத்திலேயே உறுப்பினராகி, சென்னை, வடபழனி – கோடம்பாக்கம் பகுதியில் கிளைக் கழகத்தைத் தொடங்கியபோது, சென்னை மாவட்டக் கழகப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியாற்றினார்.**

**1953 முதல் கழகம் நடத்திய போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று 18 முறை சிறை சென்றவர்.**

**பொதுக்குழு உறுப்பினராக, தலைமைக் கழக அலுவலக செயலாளராக பணியாற்றியவர்.**

**சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநகராட்சி நிலைக்குழுத் தலைவராகவும், சென்னை நகர வளர்ச்சி மேம்பாட்டுக்குழுத் தலைவராகவும் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றினார்.**

**இவரது தொண்டினைப் பாராட்டி தலைவர் கலைஞர் அவர்கள் தனது உடன்பிறப்புக்கான கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# வே. முனியாண்டி

### பிப்ரவரி 4 (2016)



**மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**முகவை மாவட்ட மாணவர் அணிச் செயலாளர் – ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட அவைத் தலைவர் – திருப்பரங்குன்றம் ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**தலைமைக் கழகப் பேச்சாளராக செயல்பட்டு, கழகக் கொள்கைகளை தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் பிரச்சாரப் பணியாற்றினார்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**